**STARTING TIME 10.48 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 118/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tr. C. Karthigaiselvam, Senior Bailiff of this court, on 27.10.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : சுரேஷ் Father's Name : ஜெயக்குமார்

Address : கதவு எண்.27/61, டில்லியப்பன் தெரு, பழனிப்பேட்டை,
அரக்கோணம் நகரம் மற்றும் வட்டம்,
ராணிப்பேட்டை மாவட்டம்.

Age : 41

**2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

1. தாவா சொத்துக்கள் சம்மந்தமாக நான் வில்லங்க சான்று எதுவும் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். எனது அம்மாவின் அம்மா பெயர் அலமேலு அம்மாள் என்றால், சரிதான், எனது அம்மாவுடன் பிறந்தவர்கள் பெயர் துரைகண்ணம்மாள் மற்றும் விஜயலட்சுமி என்றால், சரிதான். மோகன்பாபு என்பவர் யார் என்றால், துரைகண்ணம்மாளின் மகன் ஆவார்.

2. எனது தாய்வழி தாத்தாவான ராமமூர்த்தி அவர்களின் காலத்திற்கு பிறகு தாவா சொத்துக்களை எனது அம்மாவும், அவரது உடன்பிறந்தவர்கள் மற்றும் பாட்டியும் இதுநாள்வரை பாகம் பிரித்துக் கொள்ளவே இல்லை என

சொல்லியுள்ளது பொய் என்றும், எனது தாத்தாவின் காலத்திற்கு பிறகு, எனது பாட்டி, எனது தாயார் மற்றும் அவரது உடன்பிறந்தவர்கள் மற்றும் மோகன்பாபு ஆகியோர்கள் சேர்ந்து கடந்த 30.06.2010 அன்று தாவா சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகப் பிரிவினைப் பத்திரம் மூலம் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால், சரியல்ல, அந்த விவரமே எனக்கு தெரியாது, 2021–ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்த போது தான் தெரியவந்தது, அந்த பாகப்பிரிவனை பத்திரம் மோசடியானது ஆகும்.

3. பிரதிவாதிகள் இவ்வழக்கில் பதிலுரை தாக்கல் செய்த பிறகு, மேற்படி பாகப் பிரிவினைப் பத்திரம் மோசடியானது, என்னை கட்டுப்படுத்தாது என்ற பரிகாரத்தை வழக்கில் கேட்டேனா என்றால், இல்லை. எனது தாயார் இவ்வழக்கில் 13–ம் பிரதிவாதியாக உள்ளார் என்றால், சரிதான். எனது தாயார் இவ்வழக்கில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று கூறி பதிலுரை எதுவும் தாக்கல் செய்துள்ளாரா என்றால், இல்லை.

4. 30.06.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தில், எனது தாயாரின் பாகமாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களை இன்றுவரை எனது தாயார் தான் அனுபவித்து வருகிறார் என்றால், இதுநாள்வரை சொத்துக்கள் பாகம்பிரிக்காமல் பொதுவாக தான் அனுபவித்து வருகிறோம். 30.06.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் உண்மையானது என்றும், அதில் ஒதுக்கப்பட்டவாறு அவரவர் பாக சொத்தை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றும், அவ்வகையில் மோகன்பாபுவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரது வாரிசுகளான 1 முதல் 4 வரை பிரதிவாதிகள் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல, இதுநாள்வரை சொத்துக்கள் பாகம்பிரிக்காமல் கூட்டாக தான் அனுபவித்து வருகிறோம்.

5. 30.06.2010 தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரம் மோகன்பாபுவால்

மோசடியாக தயாரிக்கப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல, இதுநாள்வரை கூட்டாக அனுபவித்து, வரியையும் கூட்டாக தான் செலுத்தி வருகிறோம். தாவா சொத்துக்கள் எனது தாயாரின் தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் என்றும், அந்த சொத்துக்களை எனது தாயார் பாகப் பிரிவினை மூலம் அவரது பாகத்தை பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், எனவே, எனது தாயாரின் தகப்பனாரின் சொத்தில் பாகம் கேட்கும் உரிமையே எனக்கு இல்லை என்பதால், தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

2 முதல் 4 வரை பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதிகள் தரப்பில் மறு விசாரணை இல்லை.

**ENDING TIME: 11.08. A.M.**

YUVARAJ
Special Subordinate Judge
Digitally signed by YUVARAJ
Location: Arakkonam.
Date: 2025.10.27 16:54:21 +0530